5. ஒத்திவைப்புத் தீர்மானம்

உதகை போட்டோ ஃபிலிம்ஸ் தொழிலாளர் கைதானதும் அதனால் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தமும்.

MR. SPEAKER : The hon. Member Thiru K. T. K. Thangamani has given notice of the following adjournment motion :—

"Arrest by police on 21st July 1971 of 105 workers of the Film section of the Hindustan Photo Films Factory at Ootacamund and the consequent protest strike by the Laboratory employees of the same factory."

இதைப்போலவே திரு. சுப்பு அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி தீர்ப்பு அளிக்கும் முன் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை இது பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய உதகை போட்டோ பிலிம் தொழிற்சாலையில் நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறில் 1971 ஜூலை மாதம் 20-ஆம் தேதியன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் பெருபான்மையான வர்களுக்கும் நலம் பயக்காது என்ற காரணத்தினால் தொழிலாளர் களில் ஒரு பகுதியினர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினார்கள். உடனே நிர்வாகம் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தவர்களுடைய தலைவரை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினை சிக்கலாகாதவாறு செய்திருக்கலாம். அதற்கு மாறாக போலீசாரை அழைத்து 105 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக மற்ற தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் என்றவுடன் மேலும் 350 தொழிலாளர்களைக் கைது செய்திருக்கிறார் கள். தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினை பற்றி அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள். அப்படி இருக்க உள்ளிருப்பு வேலை நிறுத்தம் என்றவுடன் நிர்வாகம் அதன் தலைவரை அழைத்துப் பேசாது, போலீசார் உதவியை நாடியதும், போலீசார் அதில் தலையிட்டுப் பல பேர்களைக் கைது செய்திருப்பதும் இதை ஒரு அவசர பொதுமுக்கியம் வாய்ந்த பிரச்சினையாக்கியிருக்கிறது. ஆகவே இதை விவாதிக்கக் கோருகிறேன்.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலுள்ள இந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலையில் ஏறத்தாழ 1,700 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அங்கே இரண்டு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. எம்ப்ளாயிஸ் யூனியன் ஆஃப் இந்துஸ்தான் போட்டோ பிலிம் என்றும் போட்டோ பிலிம் ஸ்டாஃப் யூனியன் என்றும் இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. இவற்றில் ஒரு சங்கம் ஏற்புடையது. மற்றொன்று ஏற்புடையது அல்ல 8—5—71-ல் ஒரு கிளர்ச்சி நடந்தது. ஏற்புடைய தொழிற் சங்கத் தினர் தடை ஆணைகளைப் பெற்றனர். இதைத் தொடர்ந்து இரண்டு தொழிற்சங்கங்களுக்கும் மனக்கசப்பு வளர்ந்தது. பரிந்துரைக்கப் பட்டவைகளில் சில தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படுவதாகச் சொல்லி அதைப்பற்றி கலந்து பேசலாம் என்றும் எல்லோரும்

பொதுவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மானேஜ்மென்டார் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஒரு தொழிற்சங்கம் அதை ஏற்றுக் கொள்ளாமல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தது. பின்னர் 21-ம் தேதியன்று காலை பத்து மணியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் யோசனை பேரில் நான் தலையிட்டு தொழிலாளர் நல ஆணையரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து உரையாடுமாறு செய்தேன்.

கடைசியாக வந்த செய்தி வேலை நிறுத்தம் இன்று காலை 9-40 மணிக்கு வாபஸ் பெறப்பட்டு, தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர் என்று வந்தது. தொழிலாளர் நல கமிஷனர் வேலை நிறுத்தம் வாபஸ் பெற முயற்சி செய்தார். வேலை நிறுத்தம் செய்த நாட்களில் 3 நாட்களுக்கு ஊதியம் கிடையாது. சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்கள் எல்லாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்போது அங்கு அமைதி நிலவுகிறது. ஆகவே, பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பேரவையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

6. கவன ஈர்ப்பு

(அ) பேச்சிப்பாறை ஏரியில் ஏற்பட்ட விபத்தும், அதனால் ஏற்பட்டுள்ள உயிர் சேதமும் குறித்து.

MR. SPEAKER: Now the hon. Member Thiru R. Ponnappa Nadar will call the attention of the Hon. Minister of Public Works to a matter of urgent public importance.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I call the attention of the Hon Minister for Public Works to a matter of urgent public importance, namely the boat tragedy which took place on 3rd July 1971 in the Pachiparai Lake in Kanyakumari district when the boat capsized resulting in the loss of five lives and to stress the need to grant relief to the family of the deceased.

MR. SPEAKER: Two other hon. Members, Thiruvalargal A. Swamidhas and Thiru J. James have also given notice of similar motions.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, 3-7-1971 அன்று மாலை சுமார் 3 மணிக்கு, பேச்சிப்பாறை ஏரியில், ஏறத்தாழ அரை லாரி சுமையுள்ள மரவள்ளிக் கிழங்குகளை ஏற்றிக் கொண்டு 13 பேரை ஏற்றிச் சென்ற ஒரு நாட்டுப் படகு, பலத்த காற்று மழையின் காரணமாகக் கவிழ்ந்தது. படகில் சென்ற